## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br>Miscellaneous : <br>Preliminary Register : CC . 361/2019<br>Sessions : <br>Deposition of Witness for : LW-2/PW- 2<br>Name : சித்தராஜ்<br>Father's/Husband's Name : அரங்கநாதன்<br><br>Nationality : Indian | Village:<br>Age :38<br>Taluk :<br><br>Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 19.11.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு.வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஆடுதுறையில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2012 ம் ஆண்டு ஒரு நாள் காலை 8.30 மணியளவில் நானும், விஜயராஜனும் திருபுவனம் பட்டு சென்டருக்கு சென்று புடவை எடுத்துவிட்டு திரும்பி ஊருக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் திருவிடைமருதூர் தாலுக்கா அலுவலகம் முன்பு வந்தபோது ஒரு நபர் அடிபட்டு கீழே கிடந்தார். அந்த நபர் யார் என்று பார்த்தபோது எங்கள் தெருவை சேர்ந்த அபினாஷ்கோவிந்த்

என்பவர் ஆவார். நான் மேற்படி விபத்து குறித்து அருகில் இருந்தவர்களிடம் விசாரித்தபோது பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். மேற்படி அபினாஷ்கோவிந் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08.12.2012 ம் தேதி காலை 8.25 மணியளவில் நானும் எங்கள் தெருவை சேர்ந்த விஜயராஜனம் திருபுவனம் பட்டு செண்டருக்கும் சென்று புடவை எடுக்க இருசக்கர வாகனத்தில் போய் கொண்டிருந்போது கும்பகோணம் - மயிலாடுதுறை மெயின்ரோட்டில் திருவிடைமருதூர் தாலுக்கா அலுவலகம் முன்பு மேற்கு நோக்கி போய்க்கொண்டிருந்தோம் என்றும் அப்போது எங்களுக்கு எதிரே வந்த அபினாஷ்கோவிந் TN68F1991 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் அவென்சர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார் என்றும் அவருக்கு பின்னால் அவரது மாமா மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார் என்றும்அப்போது எங்களுக்கு பின்னால் வந்த TN61-7997 என்ற எண்ணுள்ள செல்வம் என்ற தனியார் பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் ஹாரன் அடிக்காமலும் முரட்டுதனமாகவும் ஓட்டி வந்துமேற்படி அபினாஷ்கோவிந் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் மேற்படி விபத்தில் எனது அக்கா மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் பிரேத பரிசோதனையின்போது

உடன்இருந்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC . 361/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: |
| Name : ஜெயக்குமார் | Age :51 |
| Father's/Husband's Name : மணி | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 19.11.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு.வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது 69 சாத்தனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன அபினாஷ்கோவிந்த் எனது அக்கா மகன் ஆவார். கடந்த 2012 ம் ஆண்டு ஒரு நாள் காலை 8.30 மணியளவில் நான் ஊரிலிருந்தபோது எனது தம்பி நடராஜன் என்னிடம் வந்து திருவிடைமருதூர் தாலுக்கா ஆபிஸ் எதிரில் செல்வம் பஸ் மோதி எனது அக்கா மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார். உடனே நான் எனது தம்பியுடன் வந்து

பார்த்தபோது திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை மார்ச்சுவரியில் வைத்திருந்தார்கள். நான் சம்பவம் குறித்து திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08.12.2012 ம் தேதி காலை நேரத்தில் நான் எனது அக்கா மகன்அபினாஷ்கோவிந்த்துடன் சொந்த வேலையாக கும்பகோணம் சென்றுவிட்டு தனித்தனி மோட்டார் சைக்கிளில் கும்பகோணம் - மயிலாடுதுறை மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றும் காலை 8.25 மணியளவில் திருவிடைமருதூர் தாலுக்கா அலுவலகம் முன்பு TN68F1991 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் அவென்சர் மோட்டார் சைக்கிளில் எனக்கு முன்னால் சென்ற எனதுஅக்கா மகன் மீது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எங்களுக்கு எதிரே வந்த TN61 -7997 என்ற எண்ணுள்ள செல்வம் என்ற தனியார் பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் ஹாரன் அடிக்காமலும் முரட்டுதனமாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றும் மேற்படி விபத்தில் எனது அக்கா மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் மேற்படி சம்பவம் குறித்து திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும் பிரேத பரிசோதனையின்போது உடன்இருந்தேன்

என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைதான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் இல்லை பதற்றத்தில் இருந்ததால் கையெழுத்து மட்டும் பெற்றுக் கொண்டார்கள். புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**